Survey on adoption of Family Planning Methods

* 178 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the population Council of India is conducting any survey on adoption of the Family Planning methods in this State?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆம்.

THIRU N. DENNIS: What are the findings?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இதற்கான பரிசிலனையை நடத்துவதற்கு முற்பட்டிருக்கிறார்கள். இந்திய மக்களுடைய பொதுவான மக்கள் உற்பத்தித் தொகையின் அளவினையும், அதேபோல் அவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டை ஏற்றுக்கொள்ளுகிற அந்த முறைகளையும் ஆராய முனைந்து, தமிழ்நாட்டு மாநிலத்திலேயும் ஆராய்ந்து பார்ப்பதற்காக மத்திய அரசாங்கத்தினுடைய 'பாப்புலேஷன் கவுன்சில்' ஒரு திட்டம் இட்டிருக்கிறது. அதைப் பல்வேறு கிராமங்களில் உள்ள மக்களுடைய மனப்பான்மையைக் கண்டறிந்து, அவர்கள் கைக்கொள்ளக்கூடிய முறைகளையும், குடும்பக் கட்டுப்பாட்டில் அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையையும் ஆராய்ந்து பல்வேறு பரிசிலனைகளுக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வர இருக்கிறார்கள். அந்த ஆராய்ச்சிக்கு அவர்கள் தமிழக அரசாங்கத்தினுடைய மக்கள் நல்வாழ்வுத் துறை இயக்குநருடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் கேட்டிருக்கிறார்கள். அவைகளை வழங்க தமிழக அரசின் அந்தத் துறை இயக்குநர் இசைந்திருக்கிறார்கள்.

* 179. வினா—திரு. இ. எஸ். தியாகராசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கருத்தடை ஆப்பரேஷன் செய்துக்கொள்பவருக்கு அளிக்கப்படும் மானியத்தை உயர்த்தி குறைந்த பட்சம் ரூ. 50 அளிக்க திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

அரசூரிலுள்ள கோழிப்பண்ணை.

* 180. வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் உள்ள அரசூர் கிராமத்தில் கோழிப்பண்ணை வளர்ப்புக்காகக் கட்டப்பட்டுள்ள கட்டடம் மூடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

(உ) அக்கட்டடத்தைப் பிரசவ விடுதியாக மாற்றும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அரசூரிலிருந்து—ஆனால் இப்பொழுது இல்லாத—கோழி விஸ்தரிப்பு நிலையத்திற்கு கட்டடம் கட்டத் தொடங்கி அடித்தளம் வரை கட்டி முடித்த பிறகு, அந்நிலையம் சிக்கனமான முறையில் செயல்படவில்லை என்று, மற்ற நிலையங்களோடு ஒப்பு நோக்கிய அந்தக் காரணத்தால் தெரிந்தபடியால், அது மூடப்பட்டது, அக்கட்டடத்தை கட்டி